செய்தி வெளியீடு எண். 23 நாள். 10.01.2018

## முன்னாள் படைவீரர் நல வாரியத்தின் சார்பாக முன்னாள் படைவீரர் நல வாரிய தலைவர் / மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ,ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் முன்னாள் படைவீரர் நல வாரியத்தின் சார்பாக முன்னாள் படைவீரர் நல வாரிய தலைவர் / மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ,ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 2017-ம் ஆண்டில் திருவள்ளூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல வாரியத்தின் செயல்பாடுகள் குறித்தும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்களின் நலனுக்காக புதிதாக சலுகைகள் அளிப்பது மற்றும் நிதி உதவிகளை உயர்த்துதல் போன்றவைகள் விவாதிக்கப்பட்டு கூட்டத்தின் உறுப்பினர்கள் / அலுவலர் சார்பற்ற உறுப்பினர்களால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களை தமிழ்நாடு அரசு மற்றும் சென்னை, முன்னாள் படைவீரர் நல இயக்ககம் பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உதவி இயக்குநர் (முன்னாள படைவீரர் நலன்) திருமதி.அமிருன்னிஷா, மாவட்ட வழங்கல் அலுவலர், மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட மேலாளர் (மாவட்ட தொழில் மையம்), கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர், வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**